# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை : 2025

**தமிழ் இலக்கிய நயம்**

**தரம் – 10** **மூன்று மணித்தியாலங்கள்**

*மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்*

**அறிவுறுத்தல்கள் :**

பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. "தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப் போல் எங்கும் வேண்டும்
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிலிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்"

அ. இங்கு சுவடிச்சாலை எனப்படுவது யாது?

……………………………………………………………………………………

ஆ. எத்தகைய வகையில் நூலகம் இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

……………………………………………………………………………………

2. "ஆறலை கள்வர் படை விட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"

அ. இவ்வாறு பாடியவர் யார்?

……………………………………………………………………………………

ஆ. இங்கு கூறப்பட்டுள்ள விடயம் யாது?

……………………………………………………………………………………

3. "கட்டிய அன்புக்கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ள மெல்லாமொரு
சோதி மிளிருதையா"

அ. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அணியினை குறிப்பிட்டு விளக்குக.

……………………………………………………………………………………

ஆ. உள்ளத்தில் சோதி மிளிரக் காரணம் யாது?

……………………………………………………………………………………

Past Papers Wiki

4. “ஆர்க்கும் நூபுரங்கள் பேரி, அல்குலாம் நடந்தேர், சுற்ற…”

அ. இங்கு நூபுரங்கள் எனப்படுவது யாது?

……………………………………………………………………………………..

ஆ. “அல்குலாம் நடந்தேர் சுற்ற” என்ற தொடரால் கூறப்படுவது யாது?

……………………………………………………………………………………..

5. “இன்றைக்கு இரவைக்குப் பாருங்கள் முசுப்பாத்தியை…..”

அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?

……………………………………………………………………………………..

ஆ. யாருக்குக் கூறப்பட்டது?

………………………………………………………………(5 X 4 = 20 புள்ளிகள்)

02. கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

குடும்பத்தில் தந்தை என்று வாழ்கின்ற ஒருவருக்குச் சில உரிமைகள் உண்டு: ஆனால் பொருள் வருவாய்க்கு உழைத்தல், குடும்பத்தைக் காப்பாற்றுதல் போன்ற கடமைகளும் அவருக்கு உண்டு. மகனுக்கும் சில உரிமைகள் உண்டு. தன் பெற்றோருக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காக நடக்க வேண்டும்: ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகப் படிக்க வேண்டும்: இவ்வாறு மகனுக்கும் சில கடமைகள் உண்டு. அலுவலகத்தில் அல்லது தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கு ஊதியம் பெறுதல், விடுமுறை பெறுதல், மருத்துவ வசதி பெறுதல் முதலிய உரிமைகள் உண்டு: அங்கே நேரத்துடன் சென்று குறிப்பிட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்யும் கடமைகளும் உண்டு.

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால், குழப்பம்தான் மிஞ்சும்: உள்ள உரிமையும் நிலைக்காது. இன்று உலகத்தில் பல பகுதிகளில் உள்ள சீர்கேடுகளுக்கும் குழப்பங்களுக்கும் இந்தத் தவறுதான் காரணம். பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள். கடமையில் கருத்துச் செலுத்துவது குறைகின்றது. அலுவலகம், தொழிற்சாலை முதலியவை மட்டுமல்ல: குடும்பமும் அப்படித்தான். எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப் பற்றி மிகுதியாக நினைத்து, கடமையைப் புறக்கணிக்கின்றார்களோ, அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும்: உரிமைப் போராட்டம் வளர்ந்தால் கணவன் மனைவி பூசல் வளரும்: மக்கள் ஒழுங்காக நடக்க மாட்டார்கள்: காதல், கற்பு முதலியவற்றிற்கு இடம் இருக்காது.

1. தந்தைக்குரிய கடமைகள் எவை?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

(4 புள்ளிகள்)

2. அலுவலகத்தில் அல்லது தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கான கடமைகள் எவை?

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

(4 புள்ளிகள்)

3. கடமையைப் புறக்கணிப்பதால் ஏற்படும் விளைவுகள் எத்தகையது?

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

4. உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை எனக் கூறுவதற்கான காரணத்தை எடுத்துக்காட்டுக.

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

**அல்லது**

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழு தையா - இதில்,
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

PAST PAPERS WIKI

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்த தையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுத மையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
கட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல்லாமொரு
சோதி மிளிரு தையா.

அ. மனைவியால் சமைக்கப்பட்ட உணவு எத்தகையது?

…………………………………………………………………………………………..
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(4 புள்ளிகள்)

ஆ. மனைவி சமைத்த உணவை கணவன் எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக்கின்றான்?

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………..
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(4 புள்ளிகள்)

இ. இங்கு வெளிப்பட்டிருக்கும் கணவன் மனைவியின் உறவுநிலை பற்றிக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

ஈ. உருவக அணிகள் மூன்றினை எடுத்துக் காட்டி விளக்குக.

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

(6 புள்ளிகள்)

Past Papers Wiki

## பகுதி – II

முதலாம் வினாவிற்கும் ஏனைய 2,3,4,5 ஆம் வினாக்களில் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக, மொத்தமாக **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01. பின்வரும் கவிதையை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள தொடர்களின்/ வழிகாட்டற்குறிப்புக்களின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்த பட்சம் 200 சொற்களில் எழுதுக.

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்
அம்மானும் மாமியும் வாழ வேண்டும்

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி?

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
நெல்லு மலைநாடு கண்டீரோ தம்பி?

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி,
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி?

மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி?

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி?

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி?

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி?

காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி,
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி?

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி,
வேந்தர் மணிமுடியும் கண்டீரோ தம்பி?

கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ

Past Papers WiKi

பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ

குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பெரியப்பு வாழ

ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க

அ. இப்பாடல் எழுந்த சூழல்
ஆ. மருத்துவிச்சியின் மனப்பாங்கு
இ. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வாழ்த்தப்படுகின்றது.
ஈ. இங்கு வெளிப்பட்டிருக்கும் கிராமிய மண்வாசணை.
உ. இக்காலத்தில் மருத்துவிச்சியின் நிலை.

(5 X 6 = 30 புள்ளிகள்)

02. பத்தி எழுத்தில்,
அ. மரம் என்பது உயர்திணை
ஆ. மென்மையே நீண்டநாட்கள் வாழும்
என்பவற்றிற்கு ஆசிரியர் கூறுகின்றவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

(15 புள்ளிகள்)

03. “தாய்ப்பசு” என்ற சிறுகதையில்,
அ. பசுவின் தாய்மை உணர்வு வெளிப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள்.
ஆ. பால்காரனின் செயற்பாடுகள் மூலம் வெளிப்பட்டு நிற்கும் அவனது பண்புகள்
என்பவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

04. விவேக சிந்தாமணியில்,
அ. பெண்ணின் கண்ணழகு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் விதம்.
ஆ. பெண்ணின் முக அழகைக் குறிப்பிடுவதில் உள்ள கற்பனை ஆற்றல்
என்பவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

05. “புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்” என்னும் கவிதையில்,
அ. மலையக தோட்டத் தொழிலாளிப் பெண்களின் கடின உழைப்பு
ஆ. கவிதையில் உள்ள இலக்கியச் சுவை
என்பவற்றை எடுத்துக்காட்டி விளக்குக. (15 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library